# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2010.06.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## இலங்கைப் பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**இலங்கைப் பொருளியற் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜே. ஆர். பீ. சூரியப்பெரும அவர்களால்
பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## இலங்கைப் பொருளியற் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"இலங்கைப் பொருளியற் கழகம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, குறிப்பிட்ட கழகத்தின் குறிக்கோள்களையும் விடயங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஒரு வரைவுள்ள பொறுப்புக்கள் கம்பெனியாகத் தாபிக்கப்பட்டுள்ள தாலும் ;

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாலும், அது கூட்டிணைக்கப்படவேண்டுமென்று விண்ணப்பித் துள்ளதாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, இலங்கைப் பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கைப் பொருளியல் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம், தொடங்கும் தேதியிலிருந்தும், அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை பொருளியற் கழகத்தின் உறுப்பினர்களாகத் தற்போதுள்ளவர்களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தனையாட்களும் "இலங்கை பொருளியற் கழகம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்"

2-PL 004925 -70 (2010/06)

எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்டதொரு குழுவின் உறுப்பினர்களாகவிருத்தலும், வருதலும் வேண்டுமென்பதுடன், அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத்தொடுக்கலாம் அதற்கெதிராக வழக்குத்தொடரப்படலாம்; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும். அது விரும்பியவாறு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் பொருளாதாரத்துறையிலான ஆய்வுகளை முன்னேற்றுவதையும், வசதிப்படுத்துவதையும் பொறுப்பேற்றல் ;

(ஆ) இத்துறையிலான ஆராய்ச்சிகளை ஒழுங்குபடுத்தலும், முன்னேற்றுதலும், அத்துடன் அரசாங்கத்திடமிருந்தும், தனியார் மற்றும் சர்வதேச முகவர் நிலையங்கள் அல்லது நிறுவனங்களிலிருந்தும் ஆய்வுகளையும், ஆராய்ச்சிக் கருத்திட்டங்களையும் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல் ;

(இ) பொருளாதாரத்துறையில் கற்பித்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தலும், முன்னேற்றுதலும் ;

(ஈ) பொருளாதாரம் தொடர்பிலான விடயங்களில் அறிவையும், விழிப்புணர்வையும் முன்னேற்றுவதை நோக்கமாகக்கொண்டு மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் ஆராய்ச்சிமுறையியலில் பயிற்சி வழங்குதல் ;

(உ) பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகள்குறித்து அறிக்கைகளைத் தயாரித்தலும், இலங்கையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தலும் ;

(ஊ) நாட்டினுள்ளேயும், வெளியேயும் இதையொத்த கழகங்களுடனும், அவற்றினுள்ளும் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும், நட்பையும் முன்னேற்றுதல் ;

(எ) தனது சொந்தமுயற்சியாக அல்லது உள்ளூர் அல்லது வெளிநாட்டுக் கழகங்களுடன் கூட்டுப்பணியாக இலங்கையில் அல்லது உலகின் வேறொரு பிராந்தியத்தில் பொரளாதார மற்றும் சமூக அபிவிருத்தி குறித்த அத்தகைய மதிப்பாய்வுகளையும், ஆய்வுகளையும் பொறுப்பேற்றல், முன்னேற்றம் அல்லது கொண்டுநடாத்துதல் ;

(ஏ) மேற்கூறிய குறிக்கோள்களுடன் தொடர்புள்ள அல்லது அதன் இடைநேர்விளைவான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுதல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :-

(அ) நிதிகளைத் திரட்டவும், காசாகவோ அல்லது பொருளாகவோ மானியக்கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறவும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான ஏதேனும் முறையில் கொள்ளவும், வைத்திருக்கவும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும், அல்லது கொடுக்கவும், விற்பனைசெய்யவும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களுக்கு அவசியமான அல்லது வசதியான ஏதேனும் கட்டடத்தை நிர்மாணிக்கவும், பேணவும், மாற்றவும் ;

(இ) வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவும், தொழிற்படுத்தவும், மூடவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கடன்பெறவும் அல்லது பணம் திரட்டவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதியை மன்றம் பொருத்த மெனக் கருதும் வேறுவகையில் முதலீடுசெய்தல் ;

(உ) எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கும் ;

(ஊ) பல்வேறு வகைப்பிரிவுகளிலான அங்கத்தவர்களைப் பதிவுசெய்வதற்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங் களைத் தீர்மானிக்கவும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவை யாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த் துவதற்கும், பதவிநீக்கம் செய்வதற்கும், அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் செலுத்துவதற்கும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவமும், கட்டுப்பாடும், நிருவாகமும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய, பதவிதாங்குநர்களையும், அவ்விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும்கொண்ட, ஆளும் பேரவை ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ;

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் கழகத்தின் பேரவை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் இடாப்பு.

**6**. பேரவை உறுப்பினர்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கழகத்தின் உறுப்பினராக இருக்கும் ஆளொவ்வொருவரினதும், கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோர் ஆளினதும் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் மூன்றிலிரண்டுக்குக் குறையாத உறுப்பினர்களின் வாக்குகளைக்கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச் சட்டத்தின் அல்லது வேறேதும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கம், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், விலக்குதல் அல்லது பதவி துறத்தல் ;

(ஆ) பேரவையைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவிவிலகல், பதவியிலிருந்து அகற்றப்படுதல், பதவிநிலை வறிதாக்கல், பேரவையின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும், முகவர்களினதும், சேவையாளர்களினதும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ;

(ஈ) பேரவையினதும், கூட்டுத்தாபனத்தினதும், அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் உட்பட ;

(உ) கூட்டுத்தாபனத்திலும், பேரவையிலும் உறுப்பாண்மைக்கான தகைமையும், தகைமையீனமும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள கழகத்தின் அமைப்பு அகவிதிகள், அவை சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்குக் கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படவேண்டும் என்பதோடு, இப்பிரிவின் உபபிரிவு (1) இன்கீழ் ஆக்கப்படும் விதி ஒன்றைப்போல, அதேபோன்ற கூட்டத்திலும், அதேமுறையிலும் திருத்தப்படலாம். மாற்றப்படலாம் அல்லது இல்லாதொழிக் கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8**. (1) கூட்டுத்தாபனமானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட அத்துடன் வரவு, செலவு பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டிலும், குறைந்தபட்சம் ஒரு தடவையாவது பரிசோதனை செய்யப்பட்டு, கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

கழகத்தைக் கூட்டுத்தாபனத் துக்குரித்தாக்கல்.

**9**. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து (இப்பிரிவில் "இயைபான தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவது) கழகத்தின் தொழிற்பொறுப்புமுயற்சி கூட்டுத்தாபனத்துக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும். இப்பிரிவின் நோக்கங்களுக்காக "கழகத்தின் தொழிற்பொறுப்புமுயற்சி" என்பது பின்வருமாறு பொருள்படும் -

(அ) கழகத்துக்குச் சொந்தமான அசைவுள்ள மற்றும் அசைவற்ற எல்லா ஆதனங்களும் ;

(ஆ) கழகத்தின் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் மற்றும் கழகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் ;

(இ) கழகத்தின் எல்லா ஏடுகளும், கணக்குகளும், ஆவணங்களும்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி –

(அ) இயைபான தேதியிலிருந்து கழகத்துக்குச் சொந்தமான அசைவுள்ள மற்றும் அசைவற்ற எல்லா ஆதனங் களும் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) இயைபுள்ள தேதிக்கு நேர்முந்திய நாளிலிருந்து கழகத்துக்கு வந்து சேரவேண்டிய கடன்கள் மற்றும் அதற்குச் செலுத்தப்படவேண்டிய எல்லா ஒப்பப் பணங்களும், கட்டணங்களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட வேண்டும் ;

(இ) இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளில் இருக் கின்றதான கழகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் இயைபான தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) இயைபுள்ள தேதிக்கு நேர்முந்திய நாளில் உள்ளவர் களான எல்லா அலுவலர்களும், சேவையாளர்களும் இயைபுள்ள தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களாகவும், சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) கழகத்தின் நோக்கங்களுக்காகச் செய்துகொள்ளப் பட்டவையும், இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் இயைபான தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்தால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந் தங்களாகவும், உடன்படிக்கைகளாகவும் கருதப் படுதல் வேண்டும் ;

(ஊ) கழகத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக் கப்பட்டவையும், இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லாக் குற்ற வழக்குகளும், நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட குற்ற வழக்குகளாகவும், நடவடிக்கைகளாகவும் கருதப்பட்டு, அதன் பிரகாரம் தொடரப்படவும், நடைமுறைக் கிடப்படவும் வேண்டும்.

(3) இப்பிரிவுக்கு முன்னர் இடம்பெறும் உட்பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு கழகத்தைக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்குகையில் கழகத்தின் இருப்பு முடிவடைந்துவிடுவ தோடு, கம்பனிகள் பதிவாளர் கம்பனிகள் இடாப்பிலிருந்து கம்பனியை நீக்கிவிடுதல் வேண்டும்.

*குழுக்களை நியமித்தல்.*

***10***. கூட்டுத்தாபனம் தனது அங்கத்தவர்கள் மத்தியில் உயர்தொழில் தர நியமங்களையும், ஒழுக்காற்றையும் பேணும் வகையில் காலத்துக்குக்காலம் எந்த விதமான குழுவையும் நியமிப்பதற்கும் மற்றும் அவசியமெனக் கருதும் வேறெந்த நடவடிக்கையையும் எடுப்பதற்குமான தத்துவத்தைக் கொண்ட தாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

***11***. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரின தும் அல்லது பேரவையால் முறையாக அதிகாரமளிக்கப் பட்டவாறாக பேரவை உறுப்பினர் ஒருவரினதும், பேரவையின் இன்னுமோர் உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி, எத் தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச் சாசனத்தில் தங்களது பெயர்களை ஒப்பமிடுதல் வேண்டு மென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

***12***. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாப னத்தின் கடன்களையும், பொறுப்புகளையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக அவரால் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படற்பாலமான ஆண்டு ஒப்பப்பணத்தை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைக்கப்படுமிடத்து எஞ்சியிருக்கும் ஆதனம்.*

***13***. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அதன் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் திருப்திகரமாகக் கொடுத்துத் தீர்க்கப்பட பின்னர் ஆதனம் ஏதாவது எஞ்சியிருக்குமாயின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே

*பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. மாறாக, அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக்கொண்ட வேறு ஏதாவது நிறுவகத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப் படுதல் வேண்டும் அல்லது மாற்றஞ்செய்யப்படுதல் வேண்டும். அது அல்லது அவை அதன் அல்லது அவற்றின் சொந்த விதி களின் பிரகாரம் ஏதாவது வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந் தளிப்பது தடைசெய்யப்பட்டதாகவிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் அதன் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.*

*குடியிரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளைப் பேணல்.*

***14.*** *இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்து தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***15.*** *இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்